ABK - AOTS DŌSŌKAI
(Alumni Association of ABK & AOTS, Japan)
Tamilnadu Centre
Regd. S. No. 211 / 1989

3rd Floor, Chateau D' Ampa ● 37 (110), Nelson Manickam Road, Aminjikarai ● Chennai - 600 029 ● INDIA
Tel. : 91-44-2374 0318 / 91-44-2374 3575 Email : rangaots@gmail.com / abkaots@gmail.com
Web. : abkaotschennai.com / GST No. : 33AAACA7522Q1ZJ

AAD/SP/COR/001/2019-2020 **22.07.2019**

அன்புள்ள தலைமையாசிரியர் அவர்களுக்கு,

பொருள்: ஜப்பான் செல்ல பேச்சுப் போட்டி (தமிழ்) - 2019

ஏபீகே - ஏஓடிஎஸ் தோசோகாய், தமிழ்நாடு மையம், தொழிற் பயிற்சிக்காக ஜப்பான் சென்று திரும்பியவர்களின் கூட்டமைப்பு ஆகும். இது ஒரு பதிவு செய்யப்பட்ட நிறுவனம். நாங்கள் பண்பாடு சம்பந்தமான மற்றும் சமுதாய நலப்பணிகளையும் செய்து வருகின்றோம்.

ஒவ்வொரு ஆண்டும் பள்ளி மாணவர்களுக்கு ஜப்பான் சம்பந்தமான ஒரு வினாடிவினா (Quiz) போட்டியையும் நடத்துகின்றோம். மேலும் ஒவ்வொரு ஆண்டும் **"ஜப்பான் செல்ல பேச்சுப் போட்டி"** (Talk Your Way To Japan) என்ற பேச்சுப் போட்டியை நடத்துகிறோம்.

ஹியோஷி கார்ப்பரேஷன் எனும் கம்பெனி, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புத்துறையில் ஈடுபாடு கொண்ட ஒரு நிறுவனம். ஆண்டு தோறும் எங்களால் நடத்தப்படும் **"ஜப்பான் செல்ல பேச்சுப் போட்டி"**, இந்த கம்பெனியின் ஆதரவில் நடத்தப்படுகிறது. இப்பேச்சுப் போட்டியில் முதற்பரிசு பெறும் மாணவன்/ மாணவி, இரண்டு வாரம் இலவசமாக ஜப்பானில் கல்விச் சுற்றுப்பயணம் செய்ய அழைக்கப்படுவார்கள். அந்த மாணவன் / மாணவி சென்று வரும் மற்றும் தங்கும் செலவு யாவையும் இந்தக் கம்பெனி ஏற்றுக் கொள்கிறது.

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சென்ற 24 ஆண்டுகளாக இப்பேச்சுப் போட்டியை, தமிழகத்திலுள்ள அனைத்து மேல்நிலைப்பள்ளிகளிலும் 11ம் மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்காக தமிழில் நடத்தி வருகிறோம்.

போட்டி கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி நடைபெறும்:-

போட்டி நடைபெறும் நாள் : 14.09.2019 **(சனிக்கிழமை)**
முற்பகல் - முதற்சுற்று
பிற்பகல் - இறுதிப்போட்டி

போட்டி துவங்கும் நேரம் : காலை 9.00 மணி

போட்டி நடைபெறும் இடம் : ஏபீகே - ஏஓடிஎஸ் தோசோகாய்
தமிழ்நாடு மையம்
37 (110) நெல்சன் மாணிக்கம் ரோடு
அமைந்தகரை, சென்னை - 600 029.
தொலைபேசி- 2374 0318 /2374 3575

C

இப்போட்டியின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. சென்னை நகரிலுள்ள அனைத்து மாநகராட்சி மற்றும் அரசினர் மேல்நிலைப்பள்ளிகளில் 11-ம் மற்றும் 12-ம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவியர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

2. **முதற் சுற்றுக்கான தலைப்பு :**

   மாறி வரும் பருவங்கள், காணாமல் போகும் உயிரினங்கள், அழிந்து போகும் ஆறுகள், எனக்கென்ன என அலட்சியதுடன் தனிமனிதன்.. தீர்வுகள் என்ன?

   வழங்கப்படும் நேரம் : 5 நிமிடங்கள். முதல் மற்றும் இறுதிச்சுற்றுப் போட்டியும் அதே நாளில் 14.09.2019 **(சனிக்கிழமை)** எங்கள் வளாகத்தில் நடைபெறும்.

3. இறுதிப்போட்டியில், முதற்சுற்றில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ/ மாணவியர் மட்டுமே பங்கேற்பர். இறுதிப்போட்டியில் ஒவ்வொரு பேச்சாளருக்கும் வெவ்வேறு தலைப்புகள் கொடுக்கப்படும். தலைப்பு, மூடப்பட்டுள்ள உறையிலிருந்து (Sealed Cover) எடுக்க வேண்டும். இந்த தலைப்பும், சுற்றுப்புறச்சூழல், மாசுக்கட்டுப்பாடு சம்மந்தப்பட்டதாகவே இருக்கும்.

4. முதற்சுற்றுக்கும், இறுதிப்போட்டிக்கும் வெவ்வேறு நடுவர்கள் இருப்பர். பேச்சுப்போட்டியில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

5. இறுதிப்போட்டியில் நேரம் முக்கியமானதாகக் கருதப்படும். இறுதிப்போட்டியில் குறிக்கப்பட்ட நேரத்தில் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும். அதிக நேரமோ, குறைந்த நேரமோ எடுத்துக்கொள்பவருக்கு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

6. பேச்சுப்போட்டியில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் 12.09.2019க்கு முன்னதாக எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

7. போட்டியில் பங்குபெறும் மாணாக்கர்கள் தங்கள் பள்ளியிலிருந்து சான்றிதழ் வாங்கி வரவேண்டும். இந்தச் சான்றிதழ் பள்ளியின் கடிதம் படிவத்தில் (Letter Head) இருக்க வேண்டும். இதில் தலைமை ஆசிரியர் அல்லது அவரது உதவியாளர் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

போட்டியில் முதற் பரிசு பெறுபவர் தனது சொந்த செலவில் பாஸ்போர்ட் (Passport) எடுத்துக் கொள்ள வேண்டும்.

போட்டிக்கான விதிமுறைகள்


1. ஒவ்வொரு பள்ளியும், போட்டிக்கு **3** மாணவர்கள் வரை அனுப்பலாம். அனுமதி படிவம் இணைக்கப்பட்டுள்ளது.
2. பேச்சுப்போட்டி எங்களது அலுவலக வளாகத்தில் நடைபெறும். போட்டியில் பங்கு பெறும் மாணவ / மாணவியர் தங்கள் சொந்த செலவில் போட்டி நடைபெறும் இடத்திற்கு வரவேண்டும்.

C

3. இறுதிப்போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ / மாணவியர் தனியிடத்தில் அமரவேண்டும். அவர்கள் பார்வையாளர்களுடன் அமர அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆனால் மாணவ / மாணவியர் தங்கள் பேச்சை (இறுதிப்போட்டியில்) முடித்தவுடன், போட்டி நடைபெறும் இடத்தில் அமரலாம்.
4. மாணவ / மாணவியர் பேசும்பொழுது தங்கள் பள்ளியின் பெயரை அறிவிக்கக்கூடாது.
5. போட்டி கீழ்கண்ட வரைபடத்தின்படி நடைபெறும்.

மாதிரி வரைபடம்

இந்தப்படம் நிகழ்ச்சியை விவரிப்பதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால் நிகழ்ச்சியில் பங்கேற்கும் பள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாறுபடும்.



பங்கேற்பவர்கள் தாங்கள் எடுத்த எண்ணைவைத்து அழைக்கப்படுவார்கள்

தலைப்பு

மாறி வரும் பருவங்கள், காணாமல் போகும் உயிரினங்கள், அழிந்து போகும் ஆறுகள், எனக்கென்ன என அலட்சியதுடன் தனிமனிதன்.. தீர்வுகள் என்ன?

இறுதிப்போட்டி 14.09.2019 பிற்பகல் 2.00 மணி வெவ்வேறு தலைப்புகள் சுற்றுப்புறச்சூழல், மாசுக்கட்டுப்பாடு சம்பந்தப்பட்டது - தலைப்பு மூடப்பட்ட உறையினுள் இருந்து எடுக்கவேண்டும்.

போட்டியாளர்களுக்கு அவர்களுடைய சுற்று வருவதற்கு 15 நிமிடத்திற்கு முன்தலைப்பு கொடுக்கப்படும் அதற்குள் அதற்கான குறிப்புக்களை தயாரித்துக் கொள்ளவேண்டும்.

இறுதிப்போட்டி

1. தலைப்பு அவரவர் சுற்றுக்கு 15 நிமிடத்திற்கு முன் கொடுக்கப்படும்.
2. ஆயத்தமின்றி பேசுதல் வேண்டும். (Extempore)
3. குறிப்புகளை பேசும் பொழுது எடுத்துச் செல்லலாம்.
4. ஐந்து நிமிடங்கள் பேசவேண்டும். நான்காவது நிமிடத்தில் ஒரு மணி அடிக்கப்படும்.
5. நான்கு நிமிடத்திற்கு குறைவாகப் பேசுபவர்களுக்கு மதிப்பெண் குறைக்கப்படும்.
6. ஐந்தாவது நிமிடத்தில், பேசுவதற்கான நேரம் முடிந்ததை குறிப்பிட, ஒரு மணி அடிக்கப்படும்
7. ஐந்தரை நிமிடத்திற்கு மேல் பேசுபவர்களுக்கு மதிப்பெண் குறைக்கப்படும். (மூன்றாவது மணி அடித்தவுடன் பேச்சை நிறுத்திவிட வேண்டும்)

போட்டியின்

முடிவு

வெற்றி பெற்றவர்கள் அறிவிப்பு

இந்த கடிதத்தின் நகல் ஒன்றை தங்கள் அறிவிப்பு பலகையில் வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்

- நன்றி -

தங்கள் உண்மையுள்ள

(எம். ஆர். ரங்கநாதன்)
சேர்மன்

C

அனுமதி படிவம்

தேதி :

பொருள் : ஜப்பான் செல்ல பேச்சுப் போட்டி (தமிழ்) - 2019

பள்ளியின் பெயர் :

முகவரி :

தொலைபேசி எண் :

மின்னஞ்சல் :

எங்கள் பள்ளியிலிருந்து 14.09.2019 அன்று நடைபெறும் பேச்சுப் போட்டியில் பங்குபெற கீழ்கண்ட மாணவ / மாணவியரை பரிந்துரை செய்கிறோம் :-

வ.எண்	பெயர்	வகுப்பு
1.		
2.		
3.		

நன்றி

பள்ளியின் அலுவலக முத்திரை
(Office Seal)

தலைமை ஆசிரியர் கையொப்பம்

ஆசிரியர்

C